நல்லூர் ... மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

பக்கங்கள் : ஆறு    Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 19 புதன்கிழமை (04-11-1992) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர் 342

# அரந்தலாவையில் அதிரடி!

# 25க்கு அதிக துருப்புகள் பலி!!

## 13 விமானப்படையினர், 10 பொலீஸார் 2 இராணுவத்தினர் உயிரிழந்தமை ஊர்ஜிதம்

கொழும்பு, நவம்பர் 4

அம்பாறை மாவட்டம் அரந்தலாவையில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் ரோந்து சென்ற ஸ்ரீலங்காப் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் இருபத்தி ஐந்து படையினர் உயிரிழந்தனர்.

விமானப் படையினர் 13 பேரும், பொலீஸார் பத்துப் பேரும், இராணுவத்தினர் இருவரும் இத்தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்தனர் என்று ஊர்ஜிதப்படுத்தப்பட்டது.

அரந்தலாவை முஸ்லிம் கிராமத்துக்கு அருகில் கூடாக ரோந்து சென்ற படையினர் மீதே இத்தாக்குதல்

[6ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். புதிய ஆயர் நாளை பதவியேற்பு

குருநகர், நவ. 4

புதிய யாழ். ஆயர் அதி. வண. கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகத்தின் பதவியேற்பு வைபவம் நாளை வியாழக்கிழமை யாழ் பேராலயத்திலும், வெளியரங்கிலும் நடைபெறும்.

சம்பிரதாய நிகழ்ச்சிகளுக்கு

[5 ஆம் பக்கம் பார்க்க]

## வடக்கு கடலில் கண்காணிப்பை தீவிரப்படுத்த கடற்படை முடிவு

கொழும்பு, நவ. 4

வடபகுதிக் கடலில் தமது கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்த கடற்படை திட்டமிட்டு வருவதாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

காங்கேசன்துறை துறைமுகத்தில் கூடுதல் கப்பல்கள் நிற்பதற்கு இடமளிக்கும் விதத்தில் அங்குள்ள வசதிகளை தரமுயர்த்தவேண்டியது அத்தியாவசியமாகின்றது என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

காரைநகர் கடற்படைத் தளத்தையும் அபிவிருத்தி செய்வது குறித்து கடற்படை பரிசீலனை செய்து வருகின்றது.

வடபகுதிக் கடலில் கடற்புலிகளை எதிர்த்து மேற்கொள்ளப்படும் கடற்படையின் செயல்பாடுகளுக்கு கடற்படைத் தளங்களைப் பலப்படுத்தும் நடவடிக்கைகள் அத்தியாவசியமாகின்றன என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

தற்போது வடபகுதிக் கடலில் மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு நடவடிக்கை

[5 ஆம் பக்கம் பார்க்க]

## நிதியமைச்சராக மீண்டும் றொனி?

கொழும்பு, நவ. 4

லண்டனில் அஞ்ஞாதவாசம் செய்த பின்னர் எதிர் வரும் 14 ஆம் திகதி நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்படும் முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல், நாடு திரும்பியதும் ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் சேருவார் என்றும் —

அதனைத் தொடர்ந்து அவருக்குப் பெரும்பாலும் நிதி அமைச்சர் பதவி மீண்டும் வழங்கப்படலாம் என்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

றொனி டி மெல் ஐ. தே. க. வில் சேர்ந்ததும் அவருக்கு நிதி அமைச்சர் பதவியுடன் பிரதமர் பதவியும் வழங்கப்படும் என "அத்த" பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

இதுவரை காலமும் லலித் குழுவினரின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் இருந்த — றொனி டி மெல்லின் துணைவியாரான — மல்லிகா டி மெல், ஜனநாயக ஐக்கிய

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் பாரிய தாக்குதல்; விடுதலைப் புலிகள் திட்டம்

### ஆங்கில வார இதழ் தகவல்

கொழும்பு, நவ. 4

கிழக்கு மாகாணத்தில் பாரிய தாக்குதல்களை நடத்த விடுதலைப் புலிகள் திட்டமிட்டு வருவதாகவும் —

பெரும் எண்ணிக்கையில் தமது போராளிகளை விடுதலைப் புலிகள் இயக்கம் நிந்தவூர்ப் பிரதேசத்தில் உள்ள கிராமங்களுக்கு அருகில் உள்ள காடுகளுக்கு நகர்த்தியிருப்பதாகத் தகவல் கிடைத்திருப்பதாகவும் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி "த ஐலண்ட்" வார இதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகள் இக்காடுகளில் இரகசியக் கூட்டங்களை நடத்தி வருவதாகவும் —

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை பகுதிகளுக்கு நகர்த்தப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் பாதுகாப்புப் படையினர் மீதான தாக்குதல்களை தீவிரப்படுத்துவர் என்றும் அச்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## "கொப்பேகடுவ" நினைவாக ஞாயிறன்று தேசிய துக்க தினம் பிரகடனம்!

### எதிரணிகள் அறிவிப்பு

கொழும்பு, நவ. 4

லெப்டினன்ட் ஜெனரல் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜய விமலரத்ன உட்பட பத்துப் படை அதிகாரிகள் கண்ணி வெடியில் உயிரிழந்த மூன்றாம் மாத நிறைவு நாளன்று — எதிர்வரும் 8ஆம் திகதியையும் அதை அடுத்து வரும் பூரணை தினமான 9ஆம் திகதியையும் — "லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ ஞாபகார்த்த தேசிய துக்கதினம்" எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகளின் கூட்டு முன்னணி இந்தப் பிரகடனத்தைச் செய்திருக்கிறது.

8, 9ஆம் திகதிகளில் அனுஷ்டிக்கப்படும் துக்க தின நடவடிக்கைகளின் போது விகாரைகள், தேவாலயங்கள், கோயில்கள், பள்ளிவாசல்கள் என்பவற்றில் கூடும் பொது மக்கள் ஆங்காங்கே சத்தியாக்கிரக நடவடிக்கையில் ஈடுபடுவர் என்றும் —

சகல வீடுகளிலும் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்படும் என்றும் — எதிர்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

துக்க தினத்திற்கு பூரண ஆதரவு வழங்க ஸ்ரீ. ல. சு. க, ம. ஐ. மு, கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, தேச விடுதலை மக்கள் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி (வவ, பி. டி. சில்வா அணி) ஆகியவை உறுதியளித்துள்

5 ஆம் பக்கம் பார்க்க]

## வடக்கில் பாரிய தாக்குதல் இராணுவம் பெரும் முஸ்தீபு

கொழும்பு, நவ. 4

வடபகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

— இராணுவப் பேச்சாளர் ஒருவர் இதனைத் தெரிவித்தார் என ஐலண்ட்' செய்தி வெளியிட்டிருக்கிறது.

மேலதிக படையினர் வடக்குக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனரா என்று கேட்டதற்கு —

"வழமையான துருப்புகள் நகர்த்தும் பணி இடம்பெறுகின்றது. பாதுகாப்புக் காரணங்களுக்காக அனைத்து விபரங்களையும் நான் வெளியிட முடியாது" என்றும் அந்தப் பேச்சாளர் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டின் தரை நிலைமை தரைத் தளபதிகள் மதிப்பிட்டுள்ளனர் என்றும் —

தாக்குதலுக்காக, கூட்டுப் படைகள் கட்டளையகத்தின் உதவியுடன் எல்லாத் திட்டங்களும் ஒழுங்குபடுத்தப்பட்டு வருகின்றன என்றும் அப்பேச்சாளர் மேலும் கூறினார்.

## ஆயுதப் போருக்கு அரபு நாடுகளிடம் உதவி கோருகிறது முஸ்லிம் அமைப்பு

ஆயுதம் ஏந்திப் போராடுவதற்காக கிழக்கிலங்கை முஸ்லிம் இயக்கம் ஒன்று பலஸ்தீன கெரில்லா இயக்கம் ஒன்றிடம் உதவி கோரியிருக்கிறது.

நம்பத்தகுந்த வட்டாரங்களை ஆதாரம் காட்டி "லங்காதீப" வார இதழ் இவ்வாறு செய்தி வெளியிட்டிருக்கிறது.

யாசீர் அரபாத் தலைமையில் இயங்கும் பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு எதிராகச் செயற்படும் கெரில்லா இயக்கம் ஒன்றிடமே இந்த உதவி கோரப்பட்டுள்ளதாகவும் —

இது தொடர்பாக பல கடிதங்கள் கடந்த சில வாரங்களில் பரிமாறப்பட்டுள்ளதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"முஸ்லிம் மக்கள் விடுதலை இயக்கம்" என்ற பெயரில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த இயக்கம், இப்போராட்டத்துடன் முஸ்லிம் மக்களுக்கென புதிய அரசியல் கட்சி ஒன்றையும் பதிவு செய்ய முடிவு செய்திருப்பதாகத் தெரியவருவதாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல அரபு நாடுகளிடம் உதவி கேட்டு இந்த இயக்கம் எழுதியுள்ள கடிதங்களில் —

வடக்கு - கிழக்கு யுத்தத்தில் இது வரையில் சுமார் 2 ஆயிரத்து 500 முஸ்லிம்கள் உயிரிழந்திருப்பதாகவும், ஆயிரத்து 500 முஸ்லிம்கள் அங்கவீனர்களாக்கப்பட்டுள்ளதாகவும், சுமார் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் அகதிகளாகியிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(உ-10)

## புலிகளுடன் அரசு பேச வேண்டும்

### அனுரா வலியுறுத்தல்

கொழும்பு, நவ. 4

அரசாங்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுகள் நடத்தவேண்டும். 1989 இல் நடத்தப்பட்டதுபோன்று அப்பேச்சுகள் இரகசியமாக நடத்தப்படக்கூடாது.

சுதந்திரக்கட்சி எம். பியும் அக்கட்சியின் தேசிய அமைப்பாளருமான திரு. அனுரா பண்டாரநாயக்கா 'இருது' நாளிதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

அரசு உண்மையான அக்கறையுடன் இருக்குமானால், அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தவேண்டும் என்றும் அவர் சொன்னார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நடத்தப்படும் பேச்சுகளின் முன்னேற்றம் மற்றி எதிர்க்கட்சிகளுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

"முன்னர் விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுகளின் விபரங்களைத் தமது அமைச்சரவைக்கும் கூட

[6 ஆம் பக்கம் பார்க்க]

## சமஷ்டி அமைப்பை உருவாக்க தெரிவுக் குழுவிடம் யோசனை

கொழும்பு, நவ. 4

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டிருக்கும் பாராளுமன்றத் தெரிவுக் குழு கடந்த வாரம் கூடியபோது, சமஷ்டி அரசமைப்பு முறையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

ஐக்கிய சோஷலிச அணி எம். பியாக உள்ள லங்கா சமசமாஜக்கட்சியைச் சேர்ந்த திரு. அத்தாவுட செனவிரத்ன இக்கோரிக்கையைத் தெரிவுக் குழுவின் முன்வைத்தார்.

சமஷ்டி ஆட்சி முறை போன்ற அமைப்பு ஒன்று இந்தியாவிலும் உள்ளது என்றும் அவர் அங்கு சுட்டிக்காட்டினார்.

எப்படியான அரசு முறை கொண்டு வரப்பட்டாலும் அதனை மக்கள் தேர்தல் ஒன்றில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

(உ-10)

> காடின்றி மழையில்லை
> காற்றின்றி உயிரில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### திருமதி
### தங்கரத்தினம் சாரங்கபாணி

எனதருங் பெறல் அன்னையே!

அம்மா!

கள்ளம் கபடமற்ற உனது திறந்த மனம், நீதி, நேர்மை, இரக்கம், அன்பு, தாரப்பாரிவை இத்தனை யையுமே உனது பண்புகளாகக் கொண்டு நீ வாழ்ந்து முடித்த விதம்.

உன்னுடல் உருக்கி எமக்கொளி தந்தாய்: தாயு மானாய், தந்தையுமானாய். இதனால் தாய்மைக்கு இலக்கணமானாய்.

அம்மா! நீ இறக்கவில்லை: வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து சமாதியானாய், இதனால் வானுறையும் தெய் வத்துடன் இருந்து வழிகாட்டுவாய் நீ வணங்கும் முரு கனிடம் உன் பிறவாமையை வேண்டும்;

சுசீலா.
[மகள்].

''சாரங்கம்'',
உரும்பராய் தெற்கு,
உரும்பராய்.

[5543]

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 26 — 06 — 1940

உதிர்வு: 26 — 10 — 1982

### அமரர் சின்னத்தம்பி கந்தையா
(பொலீஸ் சார்ஜண்ட்)

திதி: 04 — 11 — 1992

ஆண்டுகள் பத்து சென்றாலும்
எம் நெஞ்சில் உங்கள் நினைவுகள்
நீங்காமல் துயருறும்.

மனைவி, பிள்ளைகள்.

'திருவேரகம்',
உசன், மிருசுவில்.

[23132]

ஓம் சாயிராம்

## வீட்டுக் கிருத்தியமும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



மலர்வு: 20 — 08 — 1971

உதிர்வு: 05 — 10 — 1992

அமரர்
### குமாரசாமி இராஜேஸ்வரன்
(உரிமையாளர்; சிவாஸ் கிறீம் ஹவுஸ்)

அம்மாவின் அன்புக் குழந்தையாக, அண்ணன் மாரின் பாசமிகு தம்பியாக, அண்ணிமாரின் அன்பு மைத்துனனாக, பெறா மக்களின் இனிய சித்தப்பா வாக, அயலவரின் உதவிக்கரமாக, இளைஞரின் அன்புத் தோழனாக, தொழிலில் சிறந்த நிர்வாகத் தனாக, குடும்பத்தின் ஒளிவிளக்காக இருந்த உன்னை மின்னாமல், முழங்காமல் காலன் வந்து கவர்ந்து சென்றான்: உள்ளம் உருகி உனை நினைந்து கண்ணீர் பெருக்கி கதறி அழுகின்றோம்.

''திடீரென்று வந்தான் காலன்
தீயினிலே வெந்தது உடல்
காற்றினிலே கலந்தது ஆத்மா''

ஆத்மா சாந்தியடைய இறைவனை வணங்குகின் றோம்.

எமது துக்கத்தில் கலந்து கொண்டு பல வழிகளி லும் எமக்கு ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வ மான நன்றிகள்.

உன் பிரிவால் வாடும்,
தாய், அண்ணன்மார், அண்ணிமார்,
பெறாமக்கள்.

''குமரன் இல்லம்'',
கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு.

[2313?]

## சுதந்திரப் பறவைகள்

யாழ்ப்பாணம், நவ. 4

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினர் வெளியிடும் ''சுதந்திரப் பறவைகள்'' ஐப்பசி மாத இதழ் வெளி வந்துள்ளது. [அ]

## மேலும் 2,500 ஆசிரியர் நியமனம்

கொழும்பு, நவ 4

ஆரம்ப பாடசாலை ஆசிரி யர்களாக ஆயிரத்து ஐந்நூறு பேருக்கும், விஞ்ஞான, கணித ஆசிரியர்களாக ஆயிரம் பேருக் கும் நியமனம் வழங்கப்படும் என்று கல்விச் சேவைகள் ஆணைக் குழுத் தலைவர் ஜோர்ஜ் மெண்டிஸ் தெரிவித் தார். [இ-எ]

## இன்று

யாழ்ப்பாணம், நவ. 4

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் கல் விக் கூடத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் மாதாந்த கருத் தரங்கு இன்று பிற்பகல் 4 மணிக்கு யாழ். கிளையில் நடைபெறும். இதில் செஞ் சிலுவைச் சங்க யாழ். கிளை யின் கௌரவ செயலாளர் பேராசிரியர் வி. க. கணேச லிங்கம் விரிவுரையாற்றுவார். (த)

★ ★ ★

யாழ். விஞ்ஞான சங்கத் தின் மருத்துவ பிரிவு ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கு இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக் கழக பொறியியல் விரிவுரை மண்டபத் தில் நடைபெறும். மருத்துவ பீடத்தைச் சேர்ந்த வைத்திய கலாநிதி கே. சிவபாலன் கருத்துரை வழங்குவார். (த)

★ ★ ★

ஈச்சமோட்டை கவட்டிப் புலம் ஞானவைரவர் ஆலயத் தில் 44 வருடங்கள் அர்ச்சக ராகக் கடமையாற்றி அமர ரான இ. சுப்பிரமணிய ஐய ரின் திருஉருவப்படத் திரை நீக்கம் இன்று மாலை 3 மணிக்கு ஆலயத்தில் நடை பெறும். (உ-30)

## ரூ. 50 லட்சம் புதிய நோட்டுகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், நவ. 4

நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'குமண' கப்ப லில் இலங்கை வங்கிக்கு 50 லட்சம் ரூபா புதிய நோட் டுக்கள் எடுத்து வரப்பட்டன; பருத்தித்துறையில் இருந்து உடனடியாக அந்தப்பணம் வங்கிக்கு எடுத்துச் செல்லப் பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது. (உ-3)

## அதிபர் விளக்கமறியலில்

கொழும்பு, நவ. 4

கண்டி பாடசாலை ஒன்றில் எட்டு வயது மாணவி ஒருவ ரைத் தமது அலுவலகத்தில் வைத்து மானபங்கம் செய் தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஐம்பது வயதான அதிபர் ஒருவரை இன்று — புதன்கிழமை — வரை விளக்க மறியலில் வைக்கும்படி கண்டி நீதிவான் கடந்த வாரம் உத்தரவிட்டார். (உ-எ)

## நாளை

யாழ்ப்பாணம், நவ. 4

அமரர் செ. தனபாலசிங்கத் தின் நினைவுப் பேருரை நாளை வியாழன் மாலை 4 மணிக்கு உரும்பராய் சிதம் பர சுப்பிரமணிய சுவாமி கோயில் மண்டபத்தில் நடை பெறும்.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. க. நாகராசா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்ச்சியில் திருவாளர் கள் அ. பஞ்சாட்சரம், மு. சிவ ராசா ஆகியோர் நினைவுப் பேருரையினை நிகழ்த்துவர் ளார்கள். (ஓ)

## மலையகத்தில் 13 தமிழர் கைது

கொழும்பு, நவ. 4

ஒரு பெண் உட்பட பதின் மூன்று தமிழர்களை கட்டு கஸ்தோட்டைப் பொலீஸார் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகள் இயக் கத்துடன் அவர்களுக்குத் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தின் மீது அவர்கள் [illegible] பொலீஸார் தெரிவித்தனர். (இ-எ)

## லியோ தினம்

பரியோவான் கல்லூரி லியோக் கழகத்தின் லியோ தின விழா நிகழ்ச்சிகள் இன்று (04-11-1992) பிற்பகல் 3-00 மணிக்கு கல்லூரி பிற்றோ ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும்;

முன்னணி இளங் கலைஞர்கள் வழங்கும்

### ★ இன்னிசை கானம் ★

அனைவரையும் அழைக்கின்றனர்.

- லியோ கழகத்தினர்.

[23133]

## ஹாட்லியின் கண்ணீர் அஞ்சலி


### அமரர் எச். ஈ. அருளம்பலம்
(முன்னாள் ஆசிரியர்)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் ஆசிரிய ராக நீண்ட காலம் தன்னலமற்ற சேவை செய்த ஆசிரியமாமணி அமரர் எச். ஈ. அருளம்பலம் அவர்கள் 01-11-1992 இல் அமரரானதையறிந்து கல்லூரியானது கண்ணீர் பூக்களால் அஞ்சலி செய்து கவலையுறுவது டன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை மன்றாடி நிற்கின்றது;

அதிபர், ஆசிரியர்கள்,
பழைய மாணவர்கள், மாணவர்கள்,
ஊழியர்கள்.

(இ-3659)

## 31st DAY REMEMBRANCE



### HON. HERBERT DHARMARAJAH TAMBIAH
(Retired Chief Justice)
Old boy of Jaffna Central &
St. Thomas College, Mt. Lavinia.
(Funeral Took Place in England)

In This World: 14 — 10 — 1926

Beyond The Veil: 04 — 10 — 1992


''Those we hold most dear never truly leave us. They live on in the kindness they showed, the comfort they shared and the love they brought into our lives.''

Affectionately Remembered:
By his Brother
Edward Selvarajah Tambiah.

No 3, Front Street,
Jaffna.

(C-3650)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 22 — 03 — 1919

மறைவு: 29 — 10 — 1990

### அமரர் க. கணேசபிள்ளை
(இளைப்பாறிய பிரதம எழுது வினைஞர், சமூக சேவைப் பகுதி; கச்சேரி - யாழ்ப்பாணம்)

திதி:- 04 — 11 — 1992

இந் நாளில் உங்கள் ஆத்ம சாந்தியடைய இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள்; மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

14/7, சங்கிலியன் வீதி,
நல்லூர்.

[23126]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கிளை நூலகம்
மாநகர சபை மன்றம்
யாழ்ப்பாணம்



உ
சிவமயம்

★ புதுமனைப் புகுவிழா அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் ஆங்கிரச வருஷம் ஐப்பசி மாதம் 19 ஆம் திகதி (04-11-1992) புதன்கிழமை பகல் 9-25 மணி முதல் 10 55 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

எம்மால் புதிதாக அமைக்கப் பெற்ற

“கணபதி இல்லம்”

என்னும் புதுமனையில் குடிபுக நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து, புதுமனையை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை விரும்பும்;
சிவஸ்ரீ கு. பரமசிவக் குருக்களும் பாரியாரும்,
பிரம்மஸ்ரீ ப. சிவசங்கரசர்மா.

பிள்ளையார் கோவிலடி,
தாவடி, கொக்குவில்.
27-10 1992

[சி-3657]

உதயன் வெளியீட்டகத்தினர்
யாழ்- பல்கலைக்கழகத்துடன்
இணைந்து நடத்திய

★ கட்டுரைப்போட்டி முடிவுகள் ★

பரிசு பெறுவோர் விவரம்

பாடசாலை மாணவர் - பிரிவு - 2
(12, 13ஆம் ஆண்டுகள்)

முதலாவது பரிசு — தங்கப் பதக்கம்
பா. கோமதி — டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி

இரண்டாவது பரிசு — ரூபா 1,000-00
கே. சி. சிவகுமாரன் — யாழ். இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்

மூன்றாவது பரிசு — ரூபா 500-00
செல்வி யோலன்ட் மாறி — திருக்குடும்ப கன்னியர்மடம், யாழ்ப்பாணம்

ஆறுதல் பரிசுகள்

1. ம. கிருஷ்ணலதா, புங்குடுதீவு. ம.வி. வேலணை.
2. கு. முகுந்தன், ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை
3. வா. ஜெயந்தி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு.
4. செ. ரஜனி, கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
5. இ. சுகந்தினி, மல்லாகம் ம.வி, பண்டத்தரிப்பு.
6. இ. புஷ்பமாலா, பெரியபுலம், ம.வி, யாழ்ப்பாணம்.
7. த. மோகனரோஜினி, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.
8. ச. மோகனபாலன், மண்டைதீவு ம. வி., வேலணை.
9. மு. சூரியப்பிரகாஷ், வட்டு. இந்துக் கல்லூரி, பண்டத்தரிப்பு.
10. இ. நிர்மலா, மல்லாகம் ம. வி, பண்டத்தரிப்பு
11. செ. சோதீஸ்வரா, ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி, புத்தூர், மருதனார்மடம்.
12. இ. ஜெயப்பிரகாசினி, டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி.

இப்போட்டியில் ஆர்வத்துடன் கலந்து கொண்ட பெரும் எண்ணிக்கையான மாணவ மணிகளுக்கும், அவர்களை ஊக்குவித்த ஆசிரியர்கள், அதிபர்களுக்கும், கோட்ட, கொத்தணி மட்டங்களில் போட்டியை நடத்துவதற்கு பல்லாற்றானும் உதவிய ஆறு கல்விக் கோட்டங்களின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும், கொத்தணி அதிபர்களுக்கும் எமது நன்றிகள்.

இறுதித் தெரிவின் போது கட்டுரைகளைத் தனித் தனியே நுணுகி ஆராய்ந்து, மதிப்பீடு செய்து புள்ளியிட்டுத் தந்த யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

நிர்வாகத்தினர்,
உதயன் வெளியீட்டகம்.

292/8, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ். உதவி அரச அதிபர் பிரிவு

# மீனவர் குடும்பங்களுக்கு இலவசமாக உலர் உணவு

## அடுத்த வாரம் முதல் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 4

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கரையோரப் பகுதிகளில் வாழும் மீனவர்களுக்கு அடுத்த வாரத்தில் இருந்து இலவச உலர் உணவு வழங்கப்படவுள்ளதாக யாழ். உதவி அரசாங்க அதிபர் அலுவலக வட்டாரங்களில் இருந்து நேற்று அறியவந்தது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு இப்பகுதி மீனவர்களின் வறுமை நிவாரண உணவு முத்திரைகளை கிராம சேவையாளர்கள் ஊடாக யாழ் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் மீளப்பெற்றிருந்தது. பின்னர் அவர்களுக்கு இடம் பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் “இ” உணவு அட்டைகள் வழங்கப்பட்டன.

இந்த ‘இ’ உலர் உணவு அட்டைகள் விநியோகிக்கப்பட்ட — யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட — சுமார் 3 ஆயிரத்து 773 மீனவ குடும்பங்களுக்கே நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இந்த இலவச நிவாரணம் மாதத்தில் இரண்டு தடவைகள் பல நோ. கூ. சங்கம் மூலமாக சம்பந்தப்பட்ட மீனவர் குடும்பங்களுக்கு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-17)

## பட்டமளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 4

தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசாமி (முருகமூர்த்தி) கோவிலில் கந்தஷஷ்டி விரத காலத்தில் ஏழு தினங்களும் கந்தபுராணத்தை தெய்வீகப் பேருரையாக நிகழ்த்திய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியரும் காரைநகர் கம்பன் கழக அமைப்பாளருமாகிய திரு. த. சிவகுமாரனுக்கு ‘கந்தநிதி’ என்னும் சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டது

(இ)

## புகைப்படக் கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ 4

எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை முதல் 9ஆம் திகதி திங்கட்கிழமை வரை மூன்று தினங்களுக்கு புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் ஈழத்துப் புகைப்படக் கலைஞர்களின் புகைப்படக் கண்காட்சி ஒன்று நடைபெறவுள்ளது.

யாழ் போட்டோக் கழகம் ஏற்பாடு செய்துள்ள இந்தக் கண்காட்சி காலை 9-00 மணி முதல் மாலை 6 மணி வரை இடம்பெறும்

(ஒ-111)

## உலகத் தமிழர் மாநாடு டிச. 17இல்

சென்னை, நவ 4

உலகத் தமிழ் மாமன்றத்தின் ஏற்பாட்டில் சென்னையில் எதிர்வரும் டிசம்பர் மாதம் 17ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை இரண்டாவது உலகத் தமிழர் மாநாடு நடைபெறவிருக்கின்றது.

(இ-எ)

## இந்திய - பாக். எல்லையில் சண்டை

லண்டன், நவ. 4

இந்திய - பாகிஸ்தான் எல்லையிலுள்ள பூஞ்ச் பகுதியில் இந்திய இராணுவ சிப்பாய் ஒருவரை பாகிஸ்தான் படையினர் நேற்றுமுன்தினம் சுட்டுக் கொன்றதாக பி. ரி. ஐ. செய்தி தெரிவித்தது.

இதனை அடுத்து அப்பகுதியில் இரு தரப்பினருக்கும் இடையே கடும் சண்டை மூண்டதாக தெரிவிக்கப்பட்டது.

(ஒ-10)

தென்னங்கன்றுகள் விற்பனை

உடன் நடுகைக்குகந்த தென்னங்கன்றுகள் விற்கப்பட உள்ளன. தேவையானோர் அவ்வப்பகுதிச் சமநலசேவை நிலையங்களில் பதிவு செய்து கொள்ளவும்: ஒரு கன்றின் விலை ரூபா 40/-. புலோப்பளை நாற்றுமேடையில் நேரடியாகப் பெறுவதாயின் ரூபா 35/- க்கு பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. சிவசுவாமி,
சிரேஷ்ட கமநலசேவை உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

கமநலசேவைகள் அலுவலகம்,
யாழ்ப்பாணம்:
1992 - 11 - 03

[சி-3656]

கேள்வி அறிவித்தல்

வடக்கு - கிழக்கு மாகாண சபை -
நிர்மாணத் திணைக்களம்,

கீழ்வரும் கேள்விகள் யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் அமைந்துள்ள நிர்மாணத் திணைக்கள பிரதம பொறியியலாளரினால் 1992ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 18ஆம் திகதி புதன்கிழமை 10-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

1. வேலைகளின் விபரம்:
கிளிநொச்சி மிருக வைத்தியர் அலுவலகமும் விடுதிக்குமான திருத்த வேலைகள் (வேலி, பாதை புனரமைப்புகள் உட்பட)
2. ரூபா இரண்டு லட்சத்திற்கு (2,00,000/-) அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு கட்டடங்கள் திணைக்களத்தில் அல்லது ICTAD திணைக்களத்திலோ பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் இக்கேள்விகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.
3. மேற்படி கேள்விப்பத்திரங்களை 1992ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 11ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணிவரை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம், நிர்மாணத் திணைக்களம், கிருஷ்ணன் கோவிலடி, கிளிநொச்சியில் பெறக் கொள்ளலாம். கேள்வி வைப்புச் சமர்ப்பிக்க வேண்டிய கீழ்கண்ட வைப்புப் பணத்தை நிர்மாணத் திணைக்களம், நிறைவேற்றுப் பொறியியலாளர், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் அலுவலகத்தில் வைப்புச் செய்யலாம்.

| கேள்வி விவரம் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|
| கிளிநொச்சி மிருக - வைத்தியர் அலுவலகமும் விடுதியும் திருத்த வேலைகள் | 250/- | 900/- |

கேள்வி ஆவணங்கள் இலவசமாகப் பரீட்சிக்க முடியும்: அத்துடன் விவரங்களை நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து காரியாலய நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விதாரர் தனியார் கம்பனிகளாயின் அவை தமது தற்போதைய பணிப்பாளரினதும் பங்குதாரர்களினதும் பெயர்களைக் குறிப்பிட வேண்டும்.

முக்கிய குறிப்பு:
கட்டடப் பொருள்கள் தட்டுப்பாட்டினைக் கருத்திற் கொண்டு மேற் குறித்த வேலைகளுக்கு தேவையான கட்டடப் பொருள்கள் வைத்திருப்போர், அல்லது இவற்றைக் கொள்முதல் செய்யக் கூடியவர்கள் மட்டுமே கேள்விகளை சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

சி. கா. விநாயகரத்தினம்,
பிரதம பொறியியலாளர்,
நிர்மாணத் திணைக்களம்,
வடமாகாணம்,

கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-3654]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Royal Hero பாவித்த நல்ல நிலையிலுள்ள ஆண்களுக்குரிய சைக்கிள் விற்பனைக்கு உண்டு. அரஸ் புத்தக நிலையம், இல. 146. நவீன சந்தை (வைரவ கோயில் அருகில்), யாழ்ப்பாணம். (23094)

பிறவுன், கறுப்பு, வெள்ளை சேலம், பேட்டுக் குஞ்சுகள், புறொய்லர் உடன் விற்பனைக்குண்டு: "மல்லிகா பதி", மாக்கற் வேலி, மானிப்பாய். (23107)

## ஆண்டு - 6 அனுமதி

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு - 6 அனுமதிக்கான மாதிரிப் பரீட்சைகள் 01-11-1992, 03-11-1992, 05-11-1992, 07-11-1992, 08-11-1992, 10 - 11 - 1992, 12-11-1992 ஆகிய தினங்களில் பி.ப.3-30 மணிக்கு நடத்தப்படும். Bond Institutes, 58A. ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். (இ-3752)

## மணமகன் தேவை

யாழ். இந்து, 30 வயது நிரம்பிய கனடாவில் பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு A/L தகுதி பெற்ற மணமகன் தேவை. இலக்கினத்தில் இராகு. நட்சத்திரம் ரோகிணி கிரகபாவம் 32. மணமகனை அனுப்பும் பொறுப்பு அவர்களுடையது. சீதனம் தரப்படும். ABCDE, இல. 20, கண்டி றோட், கண்டிக்குளி. (23120)

## தங்குமிடம் வேண்டும்

மருத்துவக் கல்லூரி மாணவர்கள் இருவர் தங்குவதற்கு வசதியான இரு அறைகள் வேண்டும் க. முத்துக்குமாரசாமி, பாரதி பதிப்பகம், (A.B Printers), 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (இ-3758)

## தவறிவிட்டது

தங்க மோதிரம் ஒன்று 1-11 1992 ஞாயிற்றுக்கிழமை அன்று நல்லை ஆதீனத்துக்கு திருநெல்வேலி பலாலி றோட்டுக்கும் இடையில் அல்லது முட்டாசுக் கடைச் சந்திப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்து தருபவர்களுக்குத் தகுந்த சன்மானம் தரப்படும் சிமாட்டி, 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (5541)

## இலவச திருமண சேவை

37 வயது, பூராடம், செவ்வாய் 4, B. Sc ஆசிரியைக்கு ஏற்ற அரச / தனியார்துறை மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். எமது சேவை ஞாயிறு காலையில் உண்டு. அ விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (23121)

## செவ்வாய் மாற்றம்

ராகு, கேது, செவ்வாய் மாற்றங்களும் (சத்யா) வைரேகை சாஸ்திரம் ரூ 7-50 விற்பனையாகின்றது. பாடசாலைப் புத்தகங்களுக்கும் கிருஷ்ணசாமி புத்தகசாலை, நவீன சந்தை, யாழ்ப்பாணம், மொடர்ன் ஸ்ரோர்ஸ், நெல்லியடிச் சந்தி. (5540)

## வாழ்க்கை செலவுப் புள்ளி

கொழும்பு, நவ. 4 அக்டோபர் மாதத்துக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி 1281.0 என்று குடிசன மதிப்புப் புள்ளி விவரப் பகுதி அறிவித்துள்ளது. (இ-5)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

# வழங்குனர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 1993

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவுசெய்து கொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள் / உற்பத்தியாளர்கள் / ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1992 டிசம்பர் 15ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

### வழங்கல்கள்:

01. எழுது பொருள்கள்
02. புத்தகங்கள், பருவவெளியீடுகள், ஏனைய வெளியீடுகள்
03. அலுவலக தளபாடம் - மரம்
04. அலுவலக சாதனங்கள் (விபைல் அலுமாரி, கபினேட்டுகள் முதலியன)
05. அலுவலக இயந்திரங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள், பிரதி பண்ணும் இயந்திரங்கள், போட்டோ கொப்பி இயந்திரங்கள் முதலியன)
06. சகலவகை ஹார்ட்வெயார் பெயின்டுகள், வார்னிஷ்
07. இயந்திர கருவிகளும் உதிரிப்பாகங்களும்
08. மின்சார சாதனமும், உதிரிப்பாகங்களும்
09. வெட்டும் கருவிகள், மண்பாண்டங்கள் உட்பட சமையலறைப் பாத்திரங்கள்
10. ஜவுளிகள், யன்னல் திரைச்சீலைகள், சீருடைத் துணிகள் முதலியன
11. ஆய்வுகூட சாதனங்கள், இரசாயனப்பொருள்களும் கண்ணாடிப் பொருள்களும்
12. மரம்
13. கட்டடப்பொருள்கள் (மணல், செங்கற்கள், உலோகம், சுண்ணாம்பு முதலியன)
14. துப்புத்தடிகள், விளக்குமாறுகள், கால் துடைப்பங்கள் முதலியன
15. டயர்கள், டியூப்புகள், பற்றறிகள்
16. மோட்டார் உதிரிப்பாகங்கள், துணையுறுப்புகளும்
17. ஆயுள்வேத மருந்துகள்
18. மருந்துகளும், மருத்துவ வழங்கல்களும்
19. விளையாட்டு மற்றும் நலன்புரி பொருள்கள்
20. தீயணைப்பு சாதனங்களும் பாதுகாப்பு சாதனங்களும்
21. மழைக்கோட்டுகள், சேற்று சப்பாத்துக்கள், குடைகள், சப்பாத்துக்கள் முதலியன
22. பைப்புகளும், பைப் இணைப்புக்களும்
23. பிளாஸ்டிக் மற்றும் பைபர் கிளாஸ் உற்பத்திகளும்
24. மண்பாண்டப் பொருட்கள், கண்ணாடிப் பொருள்கள், கண்ணாடிகள்
25. தோட்ட வேலைகளுக்கான பசளைகள், இரசாயனங்கள், கருவிகள்
26. எலக்ரோனிக் உள் உறுப்புக்கள்

### சேவைகள்:

01 அச்சிடுதல், புளொக் செய்தல், ரப்பர் ஸ்டாம்புகள், திகதி ஸ்டாம்புகள்
02 அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள் முதலியன) திருத்த வேலைகள்
03 குளிர்சாதனப் பெட்டிகள், எயர்கொண்டிசனர்கள், திருத்த வேலைகளும் பராமரிப்புக்களும்
04 வீட்டுத் தளபாடங்களின் திருத்த வேலைகள்
05 மரத் தளபாடங்களுக்கான திருத்த வேலைகள்
06 கதிரைகள், பின்னல்
07 உடைகள், கதவு, யன்னல், திரைச்சீலைகளைத் தைத்தல்
08 பெயர்ப்பலகைகள் வரைதலும், பிளாஸ்டிக் பெயர்ப்பலகைகளைச் செய்தலும்
09 உடைகளைச் சலவை செய்தல்
10 புத்தகங்களையும் பருவ வெளியீடுகளையும் 'பைண்டிங்' செய்தல்

### எந்திரவியல் சேவைகள்:

01 மோட்டார் வாகனங்கள் திருத்துதல்
02 மின்மோட்டார்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதல்
03 குடிசார் எந்திரவியல் வேலைகள் (கட்டடங்கள் நிர்மாணித்தலும், திருத்த வேலைகளும்)
04 மின்சார வயறிங் வேலைகள்
05 நீர் விநியோக வடிகாலமைப்பு வேலைகள் / திருத்த வேலைகள்
06 இரும்பு கிறில்கள் / கேற்றுகள் உருவமைத்தல் / பொருத்துதல்
07 கட்டடங்கள் / கட்டட சேவைகள் அவற்றுடன் தொடர்புடைய இயந்திர சாதனங்கள் என்பவற்றுக்கான ஆலோசனைச் சேவைகள்
08 நிலையாக பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்குதல் / பொருத்துதல்

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்கல்கள் / சேவைகள்' என குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின் வருமாறு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

01 வழங்கல்களுக்கும் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்.

02 பொறியியல் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் வேலைகள் பொறியியலாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல் / சேவைக்கும் தனியான விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்துடன் பதிவுக் கட்டணமாக ரூபா 150/- பெறுமதியான, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு பெறப்பட்ட காசுக்கட்டளை / தபாற் கட்டளையையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

விலை மனுக்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே கோரப்படும், ஆயினும் வேறிடங்களிலிருந்தும் விலை மனுக்களைக் கோரப் பல்கலைக்கழகத்திற்கு உரிமையுண்டு.

கோரப்படும் பொழுது விலை மனுக்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருட்களை, சேவைகளை வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள் / சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகவல்களைக் கொண்டிருக்க வேண்டும்.

1. விண்ணப்பிக்கும் வழங்கல் அல்லது சேவை
2. பெயரும் விலாசமும்
3. தொலைபேசி இலக்கம்
4. வியாபார பதிவின் இலக்கமும் திகதியும்
5. வியாபாரத்தின் தன்மை
6. வங்கியாளர்களின் பெயர்
7. கிடைக்கக் கூடிய கடன் வசதிகள்

**குறிப்பு:**

பொறியியல் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்களிடமிருந்து பின்வரும் தகவல்கள் கோரப்படுகின்றன.

எந்திரவியல் சேவை 3க்கு பின்வருவோர் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

(அ) ICTAD தரப்படுதலின் கீழ் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு ஏதாவது அரசாங்க திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபைகளில் பதிவு செய்துள்ளவர்கள் (பதிவுப் புத்தகத்தின் போட்டோப் பிரதி / அதற்குரிய ஆவணத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்.)

(ஆ) ஏனையோர் ICTAD / ID / 02 (இரு பிரதிகள்) ICTAD / ID / 01 ஐயும் ICTAD 123 விஜயராம மாவத்தை, கொழும்பு - 7 என்ற முகவரியில் இருந்து கொள்வனவு செய்து அதற்கேற்ப விண்ணப்பிக்க வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர் கிளிநொச்சி / வவுனியா மாவட்டங்களில் வேலைகளைச் செய்ய ஆர்வமாய் இருந்தால் அது பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும். அத்துடன் அம்மாவட்டங்களில் உள்ள தமது கிளை / பிரதான காரியாலய விலாசம், அம்மாவட்டத்துக்குரிய வியாபாரப் பதிவு அத்தாட்சியுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

உங்கள் தாபனத்தில் நிரந்தரமான வேலை செய்யும் சகல எந்திரவியலாளர், கட்டடக் கலைஞர் ஆகியோரின் பெயர் அனுபவங்களைத் (7 இற்கு மட்டும்) தருக.

- பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(இ-3626)

---

# மாவீரர் பெயரில் தற்காலிக பாடசாலை மண்டபங்கள்

வடமராட்சி கிழக்கில் தற்காலிக பாடசாலை மண்டபங்கள் அண்மையில் திறந்து வைக்கப்பட்டன. இம் மண்டபங்களுக்கு மாவீரர்களின் பெயர்கள் சூட்டப்பட்டன.

இவ் வைபவத்தில் தமிழீழ கடற் புலிகளின் விசேட தளபதி திரு. சூசை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி கிழக்கு கடற்புலிகள் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பாண்டியன், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் திரு. கே. கேதீஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (த-165)

---

# டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி பழைய மாணவர் சங்கம் விசேட பொதுக் கூட்டம்

இடம்: கல்லூரியின் பிரதான மண்டபம்

காலம்: 08 — 11 — 1992 ஞாயிறு மாலை 3 00 மணி

சங்கத்தின் யாப்பு அறிமுகப்படுத்தவும், புது அங்கத்தவர்களை சேர்க்கவும், அங்கத்தவர்கள், அங்கத்தவர்கள் அல்லாத பழைய மாணவர் அனைவரையும் வருகை தருமாறு தயவாகக் கேட்டுக் கொள்கிறோம்.

க. சிவபாதசுந்தரம், தலைவர் / அதிபர். (23000) எஸ். கந்தசாமி, செயலாளர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதயன்

### எதனைக் கருதி காலக்கெடு?

அடுத்த மாத இறுதிக்குள்— டிசம்பர் மாதம் பூர்த்தியாகு முன்னர் - வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்துவிட வேண்டும். இவ்வாறு பாதுகாப்புத் துறைத் துணை அமைச்சரும், பிரதமருமான திரு டி. பி. விஜேதுங்கா ஸ்ரீலங்கா ஆயுதப்படைகளுக்கு காலக்கெடு விதித்திருக்கிறார்.

வடக்கு-கிழக்குப் போர் இப்போது முப்பதாவது மாதமாகத் தொடர்ந்து நடந்து வருகிறது. இந்த முப்பது மாத காலத்தில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு படைகளின் உயர்பீடம் மூன்று மாதம், ஆறு மாதம் என்று பல தடவைகள் கால அவகாசம் கேட்டது உண்டு. அதே போல அரச தரப்பிலும் படை உயர் அதிகாரிகளுக்கு பல தடவைகள் காலக்கெடு வழங்கப்பட்டது உண்டு. ரஞ்சன் விஜேரத்தினா காலம் தொடக்கம் கால அவகாசமும், காலக்கெடுவும் மாறி மாறிப் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் யுத்தம் முடிந்தபாடாக இல்லை. அது முடிவுக்குக் கொண்டு வரப்படுவதற்கான அறிகுறியும் இல்லை. யுத்தம் முடிவுக்கு வருவதானால் அதில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் பேசி, இணக்கம் கண்டு, சமரசமான தீர்வு ஒன்றைக் காண்பது அவசியம். இல்லையேல் யுத்தத்தில் ஒரு சாரார் வென்றும் மறுசாரார் தோற்றும் போனால் அது முடிந்துவிடும். அதுவும் இல்லையேல் இரு தரப்பினரில் ஒரு பக்கத்தினர் தமது தோல்வியை ஒப்புக்கொண்டு யுத்தத்திலிருந்து பின்வாங்க வேண்டும்- வாபஸாக வேண்டும்!

இந்த மூன்றில் எந்த வழியால் பிரதமர் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர விரும்புகிறார்?

யுத்தத்துக்கு மூலகாரணமான இனப்பிரச்சினைக்கு சமரசத் தீர்வு ஒன்று உருவாகக்கூடிய அரசியல் சூழ்நிலை எதனையும் காணமுடியவில்லை. அரசியல் தீர்வுக்கான கடைசி மார்க்கமாக அரசாங்கம் முன்னிறுத்தி வந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு சேடம் இழுக்கத் தொடங்கியுள்ளது. அது முக்கி முனங்குகிறது என்பதனை கொழும்பின் அரசியல் நிலை தெளிவாகக் காட்டுகிறது.

ஆகையால் பிரதமர் படையினருக்குக் கொடுத்திருக்கும் காலக்கெடு இரண்டாவது வழி மூலமானதாக இருக்குமா அல்லது மூன்றாவது வழி மூலமானதாக இருக்குமா என்பதே கேள்விக்குரியதாகும். பிரதமர் எதனை மனதில் வைத்துக் கெடுவை விதித்தார் என்பது அவருக்கும் அரசுக்குமே வெளிச்சம், படையினருக்குக் கூடத் தெரிந்திருக்குமோ என்னவோ?!

போரில் அரசாங்கப் படைகள் வெற்றி அடைவதன் மூலம் அதனை முடிவுக்குக் கொண்டு வர முடியும் என்று பிரதமர் எண்ணியிருந்தால் அவர் யதார்த்தம் புரியாமல் பேசுகிறார் என்பது அர்த்தம். மூன்றாவது வழியை நினைத்துக் கூறியிருப்பின் நாட்டு நலன் கருதி பல ஆபத்துக்களைத் தவிர்ப்பதற்கான தீர்க்க தரிசனத்துடன் சிந்திக்கிறார் எனக் கொள்ளலாம். இராணுவ தீர்வு உகந்ததல்ல என்பதனை உணர்ந்து அரசு போரை நிறுத்தி — வாபஸ் பெற்று புதியவழி சிந்திக்க முடிவு செய்திருக்கிறது எனக் கருதலாம்.

பாதுகாப்புத் துணை அமைச்சர் என்ற பொறுப்பைத் தாம் புத்தாக்கத்துடன் செய்வதாகக் காட்டிக்கொண்டு, படை முகாம்களுக்குச் சென்று அவர்களுக்கு மனத் தைரியமூட்டியும், படையினர் நலன்களைக் கவனிக்க உறுதி அளித்தும் வருவதன் விளைவாக பிரதமர் ஒருவித "உருக் கொண்டு" காலக்கெடுவை விதித்திருக்கலாம் என்று கருதவும் இடமுண்டு! அவ்வாறானால் இதுவரை விதிக்கப்பட்ட பல காலக்கெடுக்களைப் போலவே இதுவும் வெறும் பேச்சுப் பல்லக்குத் தம்பி கால்நடை என்றாகிவிடும்!

## அமெ. ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு முடிவுற்றது

### கிளின்ரனுக்கு வெற்றிவாய்ப்பு

வாஷிங்டன், நவ 4

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் வாக்களிப்பு இலங்கை நேரப்படி நேற்று மாலை 4 மணிக்கு ஆரம்பமானது.

இன்று அதிகாலை 4 மணிக்கு வாக்களிப்பு முடிவடைந்தது.

தேர்தல் முடிவுகள் இன்று காலை 6 மணி முதல் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இதற்கிடையில் —

தேர்தல் குழும உறுப்பினர்களில் 295 பேரின் ஆதரவு ஜனநாயகக் கட்சி வேட்பாளரான பில் கிளின்ரனுக்கு கிடைக்கும் என பிந்திய கணிப்புகள் தெரிவிப்பதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்காளர்கள், 538 பேர் கொண்ட தேர்தல் குழுமம் ஒன்றையும் தெரிவு செய்வர்.

இதில் 270 பேரின் ஆதரவைப் பெறுபவர்களே இறுதியில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார்.

அமெரிக்க மக்களின் பெரும்பான்மையோரின் ஆதரவை வேட்பாளர் ஒருவர் பெற்றாலும் அவர் தேர்தல் குழும உறுப்பினர்களின் பெரும்பான்மையோரின் ஆதரவைப் பெறாத பட்சத்தில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படமாட்டார்.

நாட்டு வாக்காளர் மத்தியிலும் தேர்தல் குழுமத்தின் உறுப்பினர்கள் மத்தியிலும் பெரும்பான்மை ஆதரவை எந்த ஒரு வேட்பாளரும் பெறத் தவறும் பட்சத்தில்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். விவசாயிகளுக்கு ஒல்லாந்தில் இருந்து விதை உருளைகிழங்கு

யாழ்ப்பாணம், நவ. 4

யாழ் மாவட்ட விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கென ஒல்லாந்தில் இருந்து 200 மெற்றிக் தொன் உயர்ரக விதை உருளைக்கிழங்கு இறக்குமதி செய்யப்பட்டு — எதிர்வரும் 17 ஆம் திகதி கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படவிருக்கிறது.

யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திரு. கா. குணரத்தினம் இத்தகவலை உதயனுக்கு தெரிவித்தார்.

ஒல்லாந்தில் இருந்து வரும் விதை உருளைக்கிழங்கு எதிர்வரும் 7 ஆம் திகதி கொழும்புக்கு வந்து சேரும் என்றும்—

கொழும்பில் இருந்து 15 ஆம் திகதி புறப்படும் 'குமண' கப்பலில் அவை இங்கு எடுத்து வரப்படும் என்றும் — அவர் மேலும் தெரிவித்தார்.

விதை உருளைக்கிழங்கு தேவையானவர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் அவர் சொன்னார்.

(த-8)

## ★ யாழ். குடாநாட்டில் எல்லா மாணவருக்கும் இலவச சீருடைத் துணி

நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கு வழங்கப்படுவது போன்று யாழ். குடாநாட்டில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் அடுத்த ஜனவரியில் இலவச சீருடைத் துணிகள் வழங்கப்படும்.

கொழும்புச் செய்திகள் இத்தகவலை வெளியிட்டன.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு மட்டுமே இலவச சீருடைகள் வழங்கப்படும் என முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

தற்போது கொழும்பு சென்றுள்ள யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அங்கு உயர் அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்தே அனைவருக்கும் சீருடைகள் வழங்க இணக்கம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## ஜெயலலிதாவுக்கு எதிராக ஜனாதிபதியிடம் மகஜர்

புதுடில்லி, நவ. 4

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகள் அடங்கிய மகஜர் ஒன்றை ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தலைமையிலான 8 உறுப்பினர் குழு ஒன்று ஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மாவிடம் நேற்று கையளித்தது.

குற்றச்சாட்டுக்களை விசாரிக்க ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்றும் மகஜரில் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதியைச் சந்தித்த இக்குழுவில் முன்னாள் அமைச்சர்களான க. ராஜாராம், வி. வி. சுவாமிநாதன், கே. திருநாவுக்கரசு, முன்னாள் மத்திய அமைச்சர் வாழப்பாடி ராமமூர்த்தி(?) முன்னாள் சட்டசபை சபாநாயகர் பி. எச். பாண்டியன் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

[உ-எ]

## "குமண" வந்து திரும்பியது

கொழும்பில் சிகிச்சை பெற்றுத் திரும்பிய நோயாளர்கள் உட்பட 72 பேர் 'குமண' கப்பல் மூலம் திருகோணமலையில் இருந்து நேற்று பருத்தித்துறைக்கு அழைத்து வரப்பட்டனர்.

அவர்களை இறக்கிவிட்டு கொழும்பில் சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் உட்பட 76 பேரை ஏற்றிக் கொண்டு மீண்டும் நேற்று மாலையே 'குமண' திருகோணமலை நோக்கிப் புறப்பட்டுச் சென்றது.

திரும்பவும் நாளை மறுதினம் 'குமண' பருத்தித்துறையை வந்தடையும் என்றும் —

கப்பலில் மீதியாக எஞ்சியிருக்கும் பொருள்களை பருத்தித்துறையில் இறக்கிவிட்டு இங்கிருந்து தபால் பொதிகளை ஏற்றிக்கொண்டு ஆறாம் திகதி 'குமண' கொழும்பு நோக்கிச் செல்லும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

(உ-3-17)

## இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 4

யாழ். கல்வித் திணைக்களம் யாழ் மாவட்டப் பாடசாலைகளிடையே நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் — 19 வயதுப் பிரிவில் — நான்கு ஆட்டங்கள் இன்று மாலை நடைபெற இருக்கின்றன.

### கொக்குவில் இந்துவில்

கொக்குவில் இந்து மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்து அணியும், சென். ஹென்றீஸ் அணியை எதிர்த்து உடுப்பிட்டி அ. மி. கல்லூரி அணியும் மோதும்.

### மட்டுவிலில்

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் கொக்குவில் இந்து அணியை எதிர்த்து சாவகச்சேரி இந்து அணியும், மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா அணியை எதிர்த்து நெல்லியடி ம. ம. வி. அணியும் மோதும்.

★ ★ ★

யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி அணிகளுக்கிடையிலான "பொன் அணிகள்" உதைபந்தாட்டம் இன்று மாலை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

முதலாம், இரண்டாம், மூன்றாம் பிரிவு அணிகளுக்கிடையில் இந்த ஆட்டங்கள் நடைபெறும். முதலாவது ஆட்டம் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும்.

★ ★ ★

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ், சுன்னாகம் ஸ்கந்தவரோதயா ஆகிய கல்லூரிகளின் முதலாம், இரண்டாம் பிரிவு அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயா மைதானத்தில் நடைபெறும்.

★ ★ ★

கோண்டாவில் வடக்கு கலைவாணி விளையாட்டுக் கழகம் கழக மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் மற்றுமொரு அரையிறுதியாட்டம் இன்று மாலை நடைபெறும்.

காட்சிப் போட்டியில் புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழக அணியும் —

அரையிறுதியாட்டத்தில் மயிலங்காடு ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழக அணியை [illegible] விளையாட்டுக் கழக அணியும் மோதும். [உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரயிலில் இளம் பெண்கள் நடத்தும் புதியபாணி திருட்டு

### வவுனியா பயணிகளுக்கு எச்சரிக்கை

கொழும்பில் இருந்து வவுனியா வரும் ரயிலில் நாகரிக உடையணிந்த இளம் பெண்கள் ஆண் பயணிகளிடம் 'சாகஸம்' புரிந்து அவர்களிடம் இருந்து பொருள்களை அபகரித்துச் செல்லும் புதியபாணி திருட்டுக்கள் நடைபெற்று வருகின்றன.

இது குறித்து ரயில் பயணிகள் எச்சரிக்கையாக நடந்து கொள்ளும்படி ரயில் நிலைய அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

கொழும்பில் இருந்து வவுனியா செல்லும் ஆண் பயணிகள் பலர் தமது அருகில் பயணம் செய்த அழகிய இளம் பெண்களிடம் பெறுமதியான உடைமைகள் பலவற்றைப் பறிகொடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமையும் இவ்வாறாக ஒரு சம்பவம் இடம்பெற்றது.

கொழும்பில் இருந்து மதவாச்சிக்கு ரயிலில் புறப்பட்ட ஆண் ஒருவருக்கு அருகே நாகரிக உடையணிந்த இளம் பெண் ஒருவர் வந்து அமர்ந்தார். ரயில் சென்று கொண்டிருந்த சொற்ப நேரத்தில் இளம் பெண் ஆண் பயணியிடம் கதைக்கத் தொடங்கினார். அவர்கள் இடையே திடீர் 'சிநேகிதம்' ஏற்பட்டது.

இடையில் சன்விச்சஸ், டொபி போன்றவற்றை அந்த யுவதி 'ஏமாந்த' பயணிக்கு கொடுத்தார். அவர் சந்தோஷமாகச் சாப்பிட்டுத் தீர்த்தார்.

அதன் பின்னர் அந்தப் பயணிக்கு நடந்தது எதுவும் தெரியாது. வவுனியாவில் இறங்க வேண்டிய அவர் வவுனியாவை ரயில் அடைந்த போதும் கண் விழிக்கவில்லை. ரயில்வே அதிகாரிகள் அப்பயணிக்கு முகத்தில் தண்ணீர் தெளித்து மயக்கத்தைத் தெளிவித்தனர்.

உணர்வு திரும்பிய அவர் தமது உடைமைகள் அனைத்தும் பறிபோயிருப்பதைக் கண்டார். ரயில்வே காவல் அதிகாரிகள் அவருக்கு 'டிக்கட்' பணம் கொடுத்து மதவாச்சிக்கு அனுப்பி வைத்தனர்.

தமிழ் சிங்கள, முஸ்லிம் பயணிகள் பலரும் இதே போன்று இளம் பெண்களிடம் தமது உடைமைகளை இழந்துள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. (ஒ)

### நிதியமைச்சராக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய முன்னணியிலிருந்து சில தினங்களுக்கு முன்னர் விலகிக்கொண்டதும் இப்பின்னணியிலேயே என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

றொனி ஐ. தே. கவில் சேருவார் என்ற செய்தி சரியா என திருமதி மல்லிகா டி மெல்லிடம் வினவிய போது அவர் அதனை மறுக்கவுமில்லை; ஊர்ஜிதம் செய்யவுமில்லை. ஆனால் றொனி டி மெல் 14 ஆம் திகதி நாடு திரும்புவதை அவர் உறுதி செய்தார்.

தமக்கு எதிராக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மோசடி வழக்குகளை அரசு விலக்கிக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையை அரசு ஏற்றதன் பேரிலேயே அவர் மீண்டும் ஐ. தே. கட்சியில் சேருகிறார் என்று கூறப்படுவதை றொனியின் மனைவி பலமாக மறுத்தார்:

"வழக்கை விலக்கிக் கொள்ளவேண்டிய தேவையே இல்லை. எனது கணவர் சட்டவிரோத செயல்களில் ஈடுபடவில்லை; அதனால் வழக்கு நீதிமன்றத்தில் தூக்கி வீசப்பட்டு விடும்;" — என்றும் அவர் சொன்னார்.

68 வயதான றொனி டி மெல் ஜெயவர்த்தனா அரசில் 11 ஆண்டுகளாக நிதி அமைச்சராகப் பதவி வகித்தவர்.

அவருக்கும் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கும் இடையில் சமரசத்தை ஏற்படுத்துவதில் கிழக்கு ஐரோப்பிய நாடு ஒன்றில் இலங்கைத் தூதுவராக இருக்கும் முன்னாள் அரசியல்வாதி ஒருவரே முக்கிய பங்கு வகித்தார் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னர் றொனி டி மெல்லின் நெருங்கிய சகாவாக இருந்தவரும், துணை அமைச்சருமான எச். ஆர். பியசிறிக்கும் இந்த விடயத்தில் பங்கு இருந்ததாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில் —

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தூதுக்குழு ஒன்று லண்டனில் றொனி டி மெல்லைச் சந்தித்துப் பேசியதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலும், லலித்தின் கட்சியிலும் நிலவும் குழப்ப நிலைகளை உன்னிப்பாகக் கவனித்து வரும் ஆளும் கட்சியினர் அவற்றின் மூலம் உச்சப் பயனைப் பெற இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதாக அரசியல் விமர்சகர் ஒருவர் தெரிவித்தார். [உ-எ-10]

### 'குமாரி' இன்று வரும்

திருகோணமலை பிறிமா ஆலையில் இருந்து 3 ஆயிரத்து 200 மெற்றிக் தொன் மாவை ஏற்றிக் கொண்டு, 'குமாரி' கப்பல் இன்று காங்கேசன்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### யாழ்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முன்பாக, புதிய ஆயர் தமது பதவியைச் சட்டபூர்வமாகக் கையேற்கும் நிகழ்ச்சி இன்று மாலை 4 மணிக்கு யாழ். ஆயர் இல்லத்தில் நடைபெறும். யாழ். மேற்றிராசன ஆலோசனைச் சபையின் பிரசன்னத்தில் முன்னாள் ஆயர் மேதகு சவரிமுத்து(?) வ. தியோகுப்பிள்ளை பொறுப்புகளைப் புதிய ஆயரிடம் கையளிப்பார்.

### வடக்கு...

[1 ஆம் பக்கத்தொடர்ச்சி]

களுக்கு பீரங்கிப் படகுகள், அதிவேகத் தாக்குதல் படகுகள் மற்றும் கடற்படையின் பிரதான கப்பல்கள் ஆகியவை திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் இருந்தே புறப்பட்டு வரவேண்டியுள்ளன என்றும் —

இதனால் இவை தளத்தில் இருந்து போர் முனைக்கு வந்து சேருவதில் காலதாமதமும் எஞ்ஜின் விரயமும் ஏற்படுவதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

### "கொப்பே"...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

னை;

அராலிக் கண்ணி வெடியில் உயிரிழந்த மேற்படி இராணுவத் தளபதிகளின் மறைவை ஒட்டி அவர்களை கௌரவிக்குமுகமாக தேசிய துக்க தினத்தைப் பிரகடனம் செய்ய அரசு தவறிவிட்டது என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தி வந்தன. தற்போது எதிர்க்கட்சிகளின் கூட்டு முன்னணி ஒருதலைப்பட்சமாக துக்கதினம் பிரகடனப்படுத்தியிருக்கிறது. [உ-எ-10]

## கைதான பின் காணாமற் போன
# 33 தமிழரின் நிலை குறித்து விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு, நவ. 4
மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளிப் பகுதியில் உள்ள கண்ணபுரம், பாலச்சோலை, காக்காச்சிவெட்டை ஆகிய கிராமங்களில் வைத்து கடந்த 19, 20ஆம் திகதிகளில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பின்னர் 33 தமிழர் காணாமற்போனதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து விசாரணை நடத்தும்படி கூட்டுப் படைகள் கட்டளைப் பீடத்தை பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கிறிக் ரணதுங்க கேட்டுள்ளார்.

இக்குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்தி அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும்படி அந்தப் பகுதியில் உள்ள படைத்தளபதிகளுக்கு தகவல் அனுப்பப்பட்டிருப்பதாகவும் ஜெனரல் கிறிக் ரணதுங்க குறிப்பிட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக விசேட உத்தரவு ஏதும் விடுக்கப்படவில்லை என்றும் அவர் சொன்னார்.

காணாமற் போனதாகக் கூறப்படும் 33 பேரில் 15 பேர் கண்ணபுரத்தையும், ஐந்து பேர் பாலச்சோலையையும் ஒன்து பேர் காக்காச்சிவெட்டையையும் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.
[உ-எ]

# சாய்ந்தமருது அகதி முகாமில் 275 தமிழர்கள் பட்டினி!

அம்பாறை மாவட்டத்திலுள்ள சாய்ந்தமருது சமுதாய சேவைகள் நிலைய அகதி முகாமில் இருக்கும் 275 தமிழ் மக்கள் பட்டினியால் வாடிக் கொண்டிருக்கிறார்கள்.

நவசமசமாஜக் கட்சிப் பிரமுகர் திரு. வி. திருநாவுக்கரசு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் பி. தயாரத்னவின் கவனத்துக்கு இதனைக் கொண்டு வந்துள்ளார்.

அகதிகளை வீடு திரும்புதற்கு நிர்ப்பந்திக்கு முகமாகவே அவர்களுக்கான உலர் உணவு வங்கிடு நிறுத்தப் பட்டுள்ளதாகவும்—

அகதிகளுக்கான குடியிசைகள் திருத்தப்படாத நிலையில் அவை படுமோசமான கட்டத்தை எட்டியிருப்பதாகவும் அவர் தமது கடிதத்தில் அமைச்சருக்கு எடுத்துக் கூறியிருக்கிறார்.
[ஞ]

# போலி பாஸ்போர்ட்டுகளை தயாரித்த 140 பேர் கைது!

## அவர்களில் 42 பேர் இலங்கையர்!!


கொழும்பு, நவ. 4
போலிக் கடவுச்சீட்டுத் தயாரித்து மேற்கு நாடுகளுக்கு ஆட்களை அனுப்பும் கோஷ்டியினர் சிங்கப்பூரில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

கைதான 140 பேரில் 42பேர் இலங்கையர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

போலிப் பத்திரங்களுடன் களவாக ஆட்களை ஏற்றிச் செல்வதற்கு சிங்கப்பூரில் உள்ள சர்வதேச விமான நிலையத்தைப் பயன்படுத்தி வந்த ஆறு குழுக்களை பொலீஸார் கைது செய்தனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.
[ஓ-எ]

05 - 11 - 92 முதல்
O/L PAPER CLASS
யூனிவேர்சல்
கந்தர்மடம் - யாழ்ப்பாணம்
(C/3652)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்:
22 — 02 — 1926

மறைவு:
05 — 10 — 1992

### திருமதி கணபதிப்பிள்ளை நல்லம்மா

அன்பின் திருவுருவாய், பண்பின் உறைவிடமாய், பாசவிளக்காய், பலரும் மதிக்க வாழ்ந்திட்ட அன்புத்தாயே! நாட்கள் பல சென்றாலும், உங்களது அன்பு முகம் என்றும் நிலைத்திருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இன்று 04-11-92 புதன்கிழமை எமது இல்லத்தில் நண்பகல் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
பெறாமகள் (புவனேஸ்வரி)
சகோதரர்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பானாவி தெற்கு,
கொடிகாமம்.
(5536)

# இரத்தம் அவசரம் தேவை

யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கியில் இரத்தத்தின் கையிருப்பு நேற்றுக் காலையுடன் முற்றாக முடிவடைந்துவிட்டதாக அறிவிக்கப்படுகிறது

இதனால் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களுக்கு இரத்தம் ஏற்ற முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும்—

பொதுமக்களை முன்வந்து இரத்ததானம் வழங்கும்படியும் — இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார்.

நேற்று அவசர தேவையை முன்னிட்டு ஆஸ்பத்திரி ஊழியர் ஐவர் இரத்ததானம் செய்தனர்.
(த-17)

### அரந்தலாவையில்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்டது.

இத்தாக்குதலை நடத்திய விடுதலைப் புலிகளின் அணியில் பெரும் எண்ணிக்கையானோர் இடம்பெற்றிருந்தனர் என்றும் —

அம்பாறைக் காடுகளில் மிக அதிகமான புலிப் போராளிகள் மறைந்திருக்கின்றனர் என்றும் ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன

இத் தாக்குதல் சம்பவத்தில் ஏற்பட்ட இழப்புகள் பற்றிய மேலதிக தகவல்கள் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை.
[உ-த-எ 3-10]

### கிழக்கில்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் விடுதலைப் புலிகள் நடத்தவிருக்கும் தாக்குதல்களை எதிர்நோக்கும் நிலையில் படையினர் தயாராக இருப்பதாகவும் —

சிவிலியன்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் வானொலி தொடர்புகளை இடைமறித்துக் கேட்ட போது, விடுதலைப் புலிகள் கல்முனைப் பொலிஸ் நிலையத்தையும் நிந்தவூருக்கு அருகில் உள்ள கிராமங்களையும் தாக்கத் திட்டமிட்டு வருவது தெரியவந்துள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'ஐலண்ட்' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(உ-எ)

### புலிகளுடன் அரசு...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரியாமல் ஜனாதிபதி இரகசியமாக வைத்திருந்தார். நாட்டின் எதிர்காலம் பற்றி நாம் கலந்துரையாடுகின்றோம்; தனிப்பட்ட விஷயங்கள் பற்றி அல்ல. 45 சதவீத மக்களை நாம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றோம். என்ன நடக்கின்றது என்பதை அறிய எமக்கு உரிமை உண்டு.

இலங்கை ஒரு சிறிய நாடு இவ்வளவு பெரும் எண்ணிக்கையில் மக்கள் கொல்லப்படுவதை எம்மால் தாங்கிக் கொள்ள முடியாது

"ஜனாதிபதி பிரேமதாஸவின் சமீபத்திய இந்திய விஜயம் சாதகமான சமிக்ஞைகளை கொண்டுள்ளது. இந்தியாவின் உயர் நிலையுடன் நல்லதொடர்பை தொடர்ந்து ஜனாதிபதி பிரேமதாஸ பேண வேண்டும். இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைக்கு இந்தியக்கொள்கை முக்கியமானதாகும்.

இலங்கையின் இராணுவக் கொள்கை குழப்பகரமாக உள்ளது. சக்தி வாய்ந்த பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் இல்லாததே இதற்கு காரணமாகும்" —

— இவ்வாறு அனுரா பண்டாரநாயக்கா தனது வெளிநாட்டுப் பயணத்தின் போது சென்னை விமான நிலையத்தில் வைத்து 'இந்து' நாளிதழுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.
(உ-எ)

### அமெ. ஜனாதிபதித்...
(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புதிய ஜனாதிபதியை அமெரிக்க நாடாளுமன்றமே தெரிவு செய்யும்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் முறை இப்படி அமைந்துள்ளது.

1801 1825 ஆம் ஆண்டு [illegible] ஜனாதிபதியைத் தெரிவு செய்[illegible]
(உ-எ)

# மரண அறிவித்தல்கள்

## வீ. இராமச்சந்திரன்

புங்குடுதீவு 9 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வேலணை கிழக்கு 2 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் - இரத்தினபுரி சந்திரா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் விருத்தாசலம் இராமச்சந்திரன் 28-10-92 இல் வேலணையில் காலமாகிவிட்டார். இவர் பவளத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற விருத்தாசலம் நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகமணி வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும், மனோரஞ்சிதம், மனோகரன் (டென்மார்க்), மனோதாசன் (பிரான்ஸ்), மனோதேவன் (கனடா), மனோவதனா (கொழும்பு), மனோராஜன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகநாதன் (உரிமையாளர், ஜெயச்சித்திரா நகை மாளிகை), இராமநாதன் (உரிமையாளர் VSSM&Co கொழும்பு), கமலவாணி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிஷாந்தன் (யாழ் இந்து ஆரம்ப பாடசாலை), பிரசாந் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), யமுனா, துர்ஷாந், சஞ்சீவ் (டென்மார்க்), சஞ்சிகா (டென்மார்க்), கோகிலன் (கொழும்பு) ஆகியோரின் அன்பு பேரனும், வேலாயுதபிள்ளை, காலஞ்சென்றவர்களான கந்தையா, ஐயம்பிள்ளை, சுப்பிரமணியம், வீரகத்திப்பிள்ளை, கதிர்காமு, திருமதி கமலம் - இராசையா, திருமதி செல்லம்மா - ஆறுமுகம், திருமதி சின்னம்மா - சுப்பிரமணியம், திருமதி பரமமணி - தாமோதரம்பிள்ளை, திருமதி இராசமணி சிவசம்பு ஆகியோரின் சகோதரரும், இரத்தினசபாபதி, மார்க்கண்டு (இரத்தினபுரி), சித்திரவடிவேலு (கிளிநொச்சி), திருமதி மனோன்மணி ஆறுமுகம், திருமதி சிவபாக்கியம் குமாரசாமி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் தகன நிகழ்வுகள் இன்று (04-11-92) புதன்கிழமை 34, பலாலி வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. யோகநாதன்
(மருமகன்)
34, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(23134)

## கணபதிப்பிள்ளை கதிரவேலு

புங்குடுதீவு 3 ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், 4 ம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான திரு. கணபதிப்பிள்ளை கதிரவேலு (3-11-92) நேற்றுக் காலமானார்.

அன்னார் தங்கமுத்துவின் கணவரும், மருதலிங்கம் (வர்த்தகர், சாவகச்சேரி), சுப்பிரமணியம் (ஜேர்மனி), புண்ணியமூர்த்தி (சாவகச்சேரி), செல்வராஜா (சாவகச்சேரி) ஆகியோரின் தகப்பனாரும், கனகாம்பிகை, தனலஷ்சுமி, இராஜலஷ்சுமி, செல்வராணி ஆகியோரின் மாமனாரும், தம்பிஐயாவின் சகோதரரும், ரமேஸ்குமார் (பிரான்ஸ்), சர்மிளா, சுரேஸ்குமார், பிரேமிளா, மேகலா, காந்தன் (ஜேர்மனி), வரதன் (சுவிஸ்லாந்து), ரதிகலா, சந்திரபாலன், முருகதாஸ், திலகவதி, முரளிதரன், கிரிஷாந், மயூரன், செல்வகலா, தர்மேஷ், கவிதா, மாலவன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (4-11-92) காலை 10 மணிக்கு நடைபெற்று சாவகச்சேரி கண்ணாப்பிட்டி மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. மருதலிங்கம்.
(மகன்)
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
(23131)

## திருமதி மரியம்மா அருளப்பு

திருமதி மரியம்மா அருளப்பு காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற ஜோர்ஜ் அருளப்புவின் அன்பு மனைவியும், திருமதி றெஜீனா டெய்சி, திருமதி மாகிறேற் (ஆசிரியை, புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்), திருமதி பிலோமினா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற திரு. சா. சின்னத்துரை, திரு. பி. குலசப்பிள்ளை (சிரேஷ்ட ஆசிரியர், புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ராதிகா, ஊதிகா, செனதிகா, கலிஸ்ரஸ், சமிலஸ், டியோ கினேற்றஸ், லொய்ஸ், ஈனஸ், டொறிஸ், யுடித்தா, லுசிந்தா, சியஸ், கனீசியஸ், கிறிஸ்ரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக இன்று புதன்கிழமை (04-11-92) 4-00 மணிக்கு பரி. கொஞ்சேஞ்சிமாதா கல்லறைத் தோட்டத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
P. குலசப்பிள்ளை
(ஆசிரியர்)
541. நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(23136)

## மார்க்கண்டு நாகம்மா

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மார்க்கண்டு நாகம்மா நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற முத்தர் முத்துப்பிள்ளையின் மகளும், காலஞ்சென்ற மார்க்கண்டுவின் மனைவியும், இராசம்மா, சிவசோதி ஆகியோரின் தாயாரும், இராசதுரை, பவநாதன் ஆகியோரின் மாமியாரும், தெய்வேந்திரம் சிவநாயகம் ஆகியோரின் சிறிய தாயாரும், கெங்கா, திருலிங்கம், வரதலிங்கம், இரத்தினலிங்கம், கிருபாகரன், சுதாஜினி, சிவாஜினி, சுதர்சன், சுதாகர், சுபிதா ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாவலர் வீதி — ஐந்து சந்தியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து இன்று பி. ப 3 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
இ. திருலிங்கம்
(மகன்)
நாவலர் வீதி,
ஐந்து சந்தி.
யாழ்ப்பாணம்.
(23137)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 04-11-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org